மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அந்த மருத்துவமனையின் வளர்ச்சியில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை நான் அதை நேரடியாக ஆய்வு செய்தபோது கண்டேன். அவர் அந்த மருத்துவமனைக்கு அடிக்கடி சென்று, தான் செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் நிறைவாக செய்திருக்கிறார். அதையும் தாண்டி, துறை செய்ய வேண்டிய பணிகளை பட்டியலிட்டு, கருத்துருவாக வழங்கியிருக்கிறார். தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கான கருத்துரு ஏற்கெனவே அரசுக்கு வரப்பெற்று, அரசின் சாதகமான பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அது நிறைவேறும் என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

101—

பதப்படுத்தும் ஆய்வகம்

***44724—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், மேல்மலையனூரில் அவுரி தழை பதப்படுத்தும் ஆய்வகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், மேல்மலையனூரில் அவுரி தழை பதப்படுத்தும் ஆய்வகம் அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. செஞ்சி, மேல்மலையனூர், வல்லம், மைலம் ஆகிய பகுதிகளிலுள்ள விவசாயிகள், தங்கள் மானாவாரி புஞ்சை நிலங்களில் குறைந்த அளவு நீர் ஆதாரம் மற்றும் செலவினங்களைக் கொண்டு, அவுரி பயிரிட்டு வருகிறார்கள். எனவே, அங்குள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தை உயர்த்தவும் மற்றும் இளைஞர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும் மேல்மலையனூரில் அவுரி தழை பதப்படுத்தும் ஆய்வகம் அமைக்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் அதே வினாவைக் கேட்டிருக்கிறார். அவுரி எனப்படும் நீலப் பயிர் ஒரு சாயப் பயிராகும். இது ஊதா நிறச் சாயம் தயாரிக்கப் பயன்படுகிறது. இது புதர் வகையான செடி. ஏறத்தாழ 2 அடி முதல் 3 அடி உயரம் வளரக்கூடியது. இப்பயிர் நவம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையில் பயிரிடப்படுகிறது. நடவு செய்த நாளிலிருந்து 90 நாட்கள் கழித்து முதல் அறுவடையும், அதற்கு அடுத்து தலா 60 நாட்கள் இடைவெளியில் மூன்று அறுவடைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தற்பொழுது செயற்கையாக வேதியியல் பொருட்கள்மூலம் பெருமளவு நீல நிறச் சாயம் தயாரிக்கப்பட்டாலும், அவுரி பயிர் இலையிலிருந்து இயற்கையாக பெறப்படும் நீல நிறச் சாயத்தின் பயன்பாடு சமீப காலங்களில் முக்கியத்துவம் பெற்று வருகிறது. இந்த ஊதா சாயத்தின் பெயர் இண்டிகோடின் ஆகும். இப்பயிரிலிருந்து கிடைக்கும் தழைகளை உலர்ந்த இலைகளாகவும், தழைகளை புளிக்கச் செய்து சாயத்தை நீல நிறக் கட்டிகளாக மதிப்பு கூட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மேலும், இப்பயிர் ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் தயாரிக்கவும், மண்ணை வளமாக்க பசுந்தாள் உரமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

[2020 மார்ச் 16

முற்பகல் 10–45

அவுரி பயிர் விழுப்புரம் மாவட்டம், வல்லம், மைலம் மற்றும் செஞ்சி வட்டாரங்களில் ஏறத்தாழ 2,660 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. மேல்மலையனூர் வட்டாரத்தில் மட்டும் அவுரி குறிப்பிடத்தக்க அளவில் பயிரிடப்படவில்லை. இப்பயிரிலிருந்து ஏக்கருக்கு 1,300 கிலோ உலர்ந்த இலைகளைப் பெறலாம். ஒரு கிலோ உலர்ந்த இலை 65 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகள் அவுரி பயிர் இலைகளை உலர வைத்து பதப்படுத்துவதற்கு தற்சமயம் வேளாண் பொறியியல் துறைமூலம் செயல்படுத்தப்படும் சூரிய கூடார உலர்த்திகள் அமைக்கும் திட்டத்தில், ஆதி திராவிடர் பழங்குடியினர் பெண் விவசாயிகள் 60% மானியத்திலும், இதர விவசாயிகள் 50% மானியத்திலும் சூரிய கூடார உலர்த்திகளை அமைத்து, இலைகளைத் தரமாகப் பதப்படுத்தி, விற்பனை செய்துகொள்ளலாம். மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் துறையில் 1 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் மருந்துப் பயிர்கள் ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. அவுரி பயிரிடும் விவசாயிகள் தங்கள் பயிர் மாதிரிகளை ஆய்வுக்குக் கொடுத்து தரப் பரிசோதனை செய்து கொள்ளலாம். அவுரிப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள், பயிர் சாகுபடி தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளவும், சாகுபடி செய்யும் அவுரிப் பயிருக்கு தரச் சான்று பெறுவதற்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வசதிகளை தேவைப்படின் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் பகுதியில் அவுரிப் பயிருக்கென தனியாக பதப்படுத்தும் ஆய்வகம் அமைக்க வேண்டிய சூழ்நிலை தற்போது எழவில்லை என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி, மேல்மலையனூர் மற்றும் வல்லம் ஆகிய பகுதிகளில் சுமார் 3,000 ஏக்கர் நிலப்பரப்பில் அவுரி பயிரிடப்படுகிறது. மருத்துவ குணம் கொண்ட இந்தச் செடிகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி

2020 மார்ச் 16]

செய்யப்பட்டு, மருந்துகளும், சாயங்களும் தயாரிக்கப்படுகின்றன. இதுபோன்று, அவுரி பயிரிட்டு, அறுவடை செய்த மகசூலை வெளிமாநில வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய சூழ்நிலை தற்போது இருக்கிறது. செஞ்சி மட்டுமின்றி, அதனைச் சுற்றியுள்ள சுமார் 100 கி.மீ. தொலைவிலுள்ள அனைத்துப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்காகவும் அவுரி தழை ஆய்வகம் அமைத்தால், தற்போது கிடைக்கும் இலாபத்தைவிட, கூடுதல் இலாபம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. எனவே, விவசாயிகள் முழுமையான பலனை அடைய வேண்டுமெனில், தமிழக அரசு விவசாயிகளின் நலன் கருதி, அவுரி தழை பதப்படுத்தும் ஆய்வகத்தை அமைத்துத் தர வேண்டும். இந்த ஆய்வகம் தமிழ்நாட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, மேல்மலையனூர் பகுதியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவுரி தழை பதப்படுத்தும் ஆய்வகம் ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று அரசை தங்கள் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. எனினும், எங்கேயும் அதுபோன்ற ஆய்வகத்தை அமைத்தது கிடையாது. அதாவது, கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மட்டும்தான் அந்த ஆய்வகம் அமைக்கப்பட்டிருக்கிறது. செஞ்சி சட்டமன்றத் தொகுதி, குறினசிப்பை பகுதியில் 410 சதுர அடியில் சூரிய கூடார உலர்த்தி 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு 60% மானியமாக ரூ.1,95,000/– தொடர்புடைய மகளிர் விவசாயிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பகுதியில், சூரிய கூடார உலர்த்தி ஒன்றை அமைப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.